**இலங்கை அச்சீட்டு நிறுவகம் - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில்

ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டுள்ளதென நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட 2.1(அ) இலக்க குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நியமம் பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் பொது நிறுவனங்களால் பின்பற்றப்படக்கூடாது என்றும், இக் கணக்கீட்டு நியமத்தின் 1.2 ஆம் பந்தியின் (அ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பொதுக் கணக்களிப் பொறுப்புடன் கூடிய நிறுவனங்களால் பின்பற்றப்படக்கூடாது என்றும் குறித்த நியமத்தின் முதலாவது பந்தியின் பகுதி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இலங்கை அச்சீட்டு நிறுவகம் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்திருந்தது. | இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் நிதி அறிக்கைகள் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த நிதி அறிக்கைகள் தவறான அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதென கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், தமது விளக்கத்தின் பிரகாரம் இந்த நிறுவகம் பொருட்கள் அல்லது வழங்கல் சேவைகளை விற்பனை செய்யும் அரசாங்க கூட்டுத்தாபனமல்ல. ஆகையால் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் மேலும் தயாரிக்கப்பட வேண்டும் என்பது எமது நம்பிக்கையாகும். | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு உரிய கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாகவும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.15 ஆ பிரிவு மற்றும் 2.4 ஆம் இலக்க நியமம் என்பவற்றிற்கு முரணாக நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி காட்டப்பட்டமை காரணமாகவும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள | கொரோனா தொற்று காரணமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியவில்லை. தொடர்ந்துவரும் ஆண்டில் பூச்சிய பெறுமதியுடன் கூடிய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நியமத்தின் கீழான ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 15,226,482 பெறுமதியான 236 சொத்து உருப்படிகளின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2018 செப்தெம்பர் 18 இல் அரசாங்க நிறுவனம் ஒன்றினால் இலங்கை அச்சீட்டு நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்ட 0.1012 ஹெக்டெயர் (40 பேர்ச்கள்) பரப்பளவிலான காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | இந்த காணியின் உரிமைகள் தொடர்பான பிரச்சனை இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அரசாங்க அச்சீட்டுத் திணைக்களத்துடன் கலந்துரையாடி முறையான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். | பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கிற்கு கொண்டு வர வேண்டும். |
| (ஈ) | வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களை அளவிடுவதற்கு திட்டமிடப்பட்ட அலகு கடன் முறை (Projected Unit Credit Method) பயன்படுத்தப்பட்டுள்ளது என கணக்குகளிற்கான குறிப்பு இல. 2.8.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 28 ஆம் அத்தியாயத்தின் 28.17 மற்றும் 28.18 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஊழியர் நலன்கள் கழிவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் தொடர்ந்துவரும் ஆண்டில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | உரிய நியமம் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 683,900 கூட்டுமொத்தமான கிரயத்தில் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் கணனிகளின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 74,223 தொகையானதுடன் அது தொடர்பான காலக்கழிவு ரூபா 194,133 ஆக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் முழு ஆண்டுக்கான தேறல் மூலமான வருமானம் இனங்காணப்பட்டுள்ளது. ஆகையால் ஆண்டின் வருமானம் ரூபா 119,910 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | எமது நிறுவனத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான கணக்கீட்டு நிறுவனத்திற்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், உரிய காலத்தில் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்காக அதிகரித்துக் காட்டப்பட்ட வருமானம் தொடர்ந்துவரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சீர்செய்யப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 10.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் ஊழியர் ஒருவர் அல்லாத ஆளுகை சபையின் உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 77,000 இடர்கடன் செலுத்தப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் 4.2 சதவீத வட்டிக்கு உட்பட்டு இந்தக் கடன் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. தன்னிறைவு பெற்ற நிறுவனமொன்றாக உள்ள நிறுவனத்தின் அனைத்து நிதிகளையும் முறையாக முகாமை செய்வதன் மூலம் நிறுவனத்தை இலாபகரமாக பேணுவதற்கு இதுபோன்ற தீர்மானங்கள் பயனுள்ளதாக இருக்கும் என்பது எமது நம்பிக்கையாகும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 | 2020 செப்தெம்பர் 16 இல் உள்ளாறு ரூபா 10,750 பெறுமதியான காசோலை தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த காசோலை நிறுவனத்தில் கற்கைநெறி ஒன்றிற்காக சேர்ந்திருந்த மாணவர் ஒருவரிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. கற்கைநெறியை விட்டு வெளியேறிய அவருக்கு காசோலை வழங்கப்பட்டது. இருப்பினும், காசோலை மதிப்பிழந்ததால், தொடர்ந்துவரும் ஆண்டில் அந்த பெறுமதியை வங்கி கணக்கிணக்க கூற்றில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,007,595 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4,871,298 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 136,297 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கற்கைநெறிக் கட்டண வருமானம் ரூபா 1,048,511 ஆல் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தலைவர் நியமிக்கப்பட்டிருக்காத போதிலும் ஆளுகைக் சபையின் உறுப்பினர் ஒருவராக இருந்த அரசாங்க அச்சகர் ஒருவரிற்கு மீளாய்வாண்டில் தலைவருக்கான படியாக ரூபா 600,000 செலுத்தப்பட்டது. | அப்போதைய அரசாங்கம் நீண்டகாலமாகத் தலைவர் ஒருவரை நியமனம் செய்யத் தவறியதால், அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து ஆளுகைச் சபைக்குத் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அமைச்சின் செயலாளரால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருக்கு தலைவருக்கு உரித்தான படி செலுத்தப்பட்டது. | சட்டத்தின் பிரகாரம் தலைவர் நியமிக்கப்படாததால் சட்டவிரோதமாக செலுத்தப்பட்ட தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை அச்சீட்டு நிறுவகம் தனது ஊழியர் ஒருவரின் சேவையை நியாயமற்ற முறையிலும் நீதியற்ற முறையிலும் முடிவுறுத்தியுள்ளதென தொழிலாளர் தீர்ப்பாயம் முடிவு செய்திருந்ததால் மீளாய்வாண்டில் அந்த ஊழியருக்கு ரூபா 522,000 தொகை செலுத்தப்பட்டது. | ஒழுக்காற்று விசாரணையின் போது குறித்த ஊழியரின் பணிநீக்கம் காரணமாக அவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பைத் தொடர்ந்து ரூபா 522,000 தொகை நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தல் நிதி விரயமொன்றாக உள்ளதால் அந்த ஊழியரின் சேவையை நிறுத்தியதன் மூலம் குறித்த தொகை செலுத்தப்பட்டது. | எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |